सत्यमेव जयते

# இந்தியத் துணைத்தூதரகம்
## யாழ்ப்பாணம்

## ஊடக அறிக்கை

யாழ் இந்தியத் துணைத் தூதரகமானது இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் பாரத் ரத்னா கலாநிதி A.P.J அப்துல் கலாம் அவர்களின் 86வது பிறந்தநாளை முன்னிட்டு சிறப்பு நிகழ்வினை ஒக்டோபர் 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் பொது நூலக கேட்போர் கூடத்தில் ஏற்பாடு செய்துள்ளது.

ஆரம்ப நிகழ்வாக மாணவர்கள் முன்னிலையில் நூலக இந்தியா கோர்ணர் பகுதியல் அமைக்கப்பட்டுள்ள பாரத் ரத்னா கலாநிதி A.P.J அப்துல் கலாம் அவர்களின் திருவுருவச் சிலைக்கு இந்திய துணைத்தூதுவரால் மாலை அணிவித்து மரியாதை செய்யப்படும்

அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, உடுவில் பெண்கள் கல்லூரி, திருக்குடும்ப கன்னியர்மடம் பெண்கள் பாடசாலை, சென் பற்றிக்ஸ் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மாணவர்களின் பல்வேறு கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள தமிழ் நாட்டின் பிரபல பேச்சாளர் திரு சுகி சிவம் அவர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

****

9 ஒக்டோபர், 2017